# தூதன்

தூதன் - 30 பிப்ரவரி - 2021 தூது - 2

**ஒரு மனிதன் தன் பிள்ளையைச் சுமந்துகொண்டு போவதுபோல, நீங்கள் இவ்விடத்திற்கு வருகிறவரைக்கும், நடந்துவந்த வழிகள் எல்லாவற்றிலும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சுமந்துகொண்டு வந்ததைக் கண்டீர்களே. உபாகமம் 1:31**




Private Circulation only

தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 01 |
| உதவி போதகர் மடல் – ஃபுஜைரா | 03 |
| உதவி போதகர் மடல் – இராஸ் அல் கைமா | 05 |
| உதவி ஆயரம்மா மடல் – இராஸ் அல் கைமா | 07 |
| செயலர் மடல் | 09 |
| பயத்தை ஜெயித்தவன் | 10 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 11 |
| அறிந்து கொள்வோம் | 12 |
| திருச்சபை ஜெபநாள் | 14 |
| சகரியா – எலிசபெத் | 16 |
| தெரிந்துகொள்வோம் | 18 |
| வேதவினா போட்டி | 20 |
| Health Tips | 22 |
| Children's Corner | 25 |
| Birthday Celebrants | 31 |
| Wedding Anniversary | 34 |
| Pool of Siloam | 35 |



P.O.Box: 8785, Dubai. Mob: 050-5533645

Email: office@csitamilparishdubai.com - Website: www.csitamilparishdubai.com

# சபை போதகர் மடல்

ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் இணையற்ற அன்பின் திருப்பெயரில் என் வாழ்த்துக்கள். 2021-ம் ஆண்டின் 2-வது மாதத்திற்குள் கடந்துவர ஆண்டவர் நமக்குத் தந்த கிருபையின் ஆசீர்வாதத்தை எண்ணி நாம் இணைந்து நன்றியுடன் ஆண்டவரைப் போற்றுவோம்.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த 21-ம் நூற்றாண்டு தொழில் நுட்பத்தின் உச்சக்கட்ட வளர்ச்சியின் காலம் என்பதை நாம் நன்கறிவோம். புதிதாய் பிறந்த குழந்தைகள் கூட செல்போன்களை மிக சாதராணமாகக் கையாள்வதை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். இன்னும் விவரிக்க இயலாத அசுர வளர்ச்சியில் தொழில் நுட்பத்துறை நாள்தோறும் சென்று கொண்டிருக்கின்றது. நவீன தொழில்நுட்ப வளர்ச்சியில் ஒரு முக்கிய மைல்கல், 'The Electronics Eyes' என்றழைக்கப்படும் கண்காணிப்புக் கேமராக்கள் (surveillance cameras) இவைகள் இல்லாத இடங்களே இல்லை என்று சொல்லத்தக்கதாக நாம் அனைவருமே எப்போதும் இந்தக் கேமராக்களின் கண்காணிப்பு வளையங்களுக்குள்ளாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பது நிதர்சனமான உண்மை. இந்த மாதத்தின் தியான வசனமும் இந்தக் கண்கள் தொடர்புடையது தான்.

மனுஷனுடைய வழிகள் கர்த்தரின் கண்களுக்கு முன்பாக இருக்கிறது. நீதிமொழிகள் 5.21.

For a mans ways are in full view of the Lord. Proverbs 5.21

இந்த வசனம் மூன்று முக்கியமான செய்திகளை நம்முடைய விசுவாச வாழ்விற்காக தருகின்றது.

இது நம்பிக்கையையும் பாதுகாப்பையும் தருகிறது - It gives us hope and protection: நாட்டின் பாதுகாப்பிலும், வீட்டின் பாதுகாப்பிலும், நிறுவனங்கள் பாதுகாப்பிலும் இந்த கண்காணிப்புக் கேமிராக்கள் மிக மிக முக்கிய பங்கை வகிக்கிறது. இந்தக் கண்டுபிடிப்புகளுக்கெல்லாம் முன்னோடியாய், நம் ஆண்டவரின் கண்கள் இருப்பதைத் திருமறை நமக்குக் கற்றுத்தருகிறது. ஆண்டவரின் கண்பார்வையின் கண்காணிப்பு வளையங்களுக்குள் நாம் அனைவரும் இருக்கிறோம் என்பதை உணர்ந்து நன்றி சொல்வோம். இந்தக் கண்காணிப்பு வளையம் ஆண்டவர் நம்முடன் இருக்கிறார், அவர் நம்மைப் பாதுகாப்பார் என்ற உயர்வான நம்பிக்கையை நமக்குத் தருகிறது. 34-ம் சங்கீதம் 15-வது வசனத்தில் தாவீது ராஜாவின் அனுபவம் இதை நமக்குக் கற்றுத்தந்து உறுதிப்படுத்துகிறது. கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது. அது மட்டுமல்லாமல் அவர்களுடைய எல்லா உபத்திரவங்களிலிருந்தும் விடுவிக்கிறார், தப்புவிக்கிறார், பாதுகாக்கிறார் என்பதை தாவீது அரசன் நமக்குக் கற்றுக் கொடுக்கிறார். இன்றைக்கு நாம் கர்த்தரின் கண்காணிப்பு வளையத்திற்குள் நம்பிக்கையோடும், பாதுகாப்போடும் இருப்பதை எண்ணி ஆண்டவரைப் போற்றுவோம்.

**இது மகிழ்ச்சியையும்,ஆசீர்வாதத்தையும் தருகிறது - It Gives us Joy and Blessings:** கர்த்தரின் கண்காணிப்பு நமக்குத்தரும் இரண்டாவது செய்தி மகிழ்ச்சியும், ஆசீர்வாதமும். 2 சாமுவேல் 7:29-ம் வசனத்தில் தாவீது அரசன் சர்வவல்லமையுள்ள ஆண்டவரிடத்தில் நன்றி சொல்லி ஜெபிக்கும்போது, அந்த ஜெபத்தின் நிறைவில் இவ்விதம் கூறுகிறார்.

இப்போதும் உமது அடியானின் வீடு என்றெக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படி அதை ஆசீர்வதித்தருளும். என் வீடும், என் குடும்பமும் எப்போதும் கடவுளின் கண்களுக்கு முன்பாக அல்லது ஆண்டவரின் முகத்திற்கு முன்பாகவே இருக்கவேண்டும் என்ற தனது உன்னதமான எதிர்பார்ப்பை தாவீது வெளிப்படுத்துகிறார். ஆண்டவரின் அருட்பிரசன்னம் எப்போதும் என் வீட்டிலும், என் குடும்பத்திலும் நிறைந்திருக்கும் பொழுது மகிழ்ச்சிக்கும், ஆசீர்வாதத்திற்கும் குறைவே இராது என்பதை நாம் அறிந்து அனுபவித்து ஆண்டவரைப் போற்றுவோம். பக்தன் பாடுவதுபோல் இயேசுவின் குடும்பம் ஒன்று உண்டு என்ற பாடலின் வரிகளில் ராஜாதி ராஜா இயேசு என்றென்றும் வாழ்ந்திடுவார் என்ற அனுபவத்துடன் ஆண்டவரின் கண்காணிப்பு வளையத்தில் மகிழ்ந்து வாழுவோம்.

**இது நமக்கு கடுமையான எச்சரிப்பையும் தருகிறது - It Gives us stern warning :** கர்த்தருடைய கண்காணிப்பு நமக்குத் தரும் மூன்றாவது செய்தி கடுமையான எச்சரிப்பு. சங்கீதம்:14:2-ல் இப்படி நாம் வாசிக்கிறோம். கர்த்தர் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார். எல்லாரும் வழி விலகி ஏகமாய்க் கெட்டுப்போனார்கள். கர்த்தருடைய கண்காணிப்பு வளையத்திற்குள் நாம் வாழ விரும்பினால் நாம் நம்மையும், நம்முடைய வழிகளையும் மிகவும் ஜாக்கிரதையாய் காத்துக் கொள்வது அவசியமான ஒன்றாகும். ஏனென்றால் நாம் பாவம் நிறைந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எந்தச் சூழ்நிலையிலும் பாவத்தின் கண்ணியில் நாம் விழக் கூடிய அபாயம் நமக்கு உண்டு. ஆனால் ஆண்டவரின் கண்கள் நம்மை பார்த்துக்கொண்டே இருக்கிறது. எனவே நாம் பாவத்தில் விழுந்து விடக்கூடாது என்ற தொடர் எச்சரிக்கை உணர்வுடன் நம்மைக் காத்துக் கொள்வது முக்கியம். யோசேப்பு அத்தகைய எச்சரிக்கை உணர்வுடன் வாழ்ந்ததினால் பாவத்தில் விழுந்து விடாதபடி தன்னைக் காத்துக் கொள்ள முடிந்தது. ஆதியாகமம் 39:9-ல் யோசேப்பின் வார்த்தைகள் இந்த உண்மையை நமக்குப் புலப்படுத்துகிறது. “இப்படியிருக்க நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி” ஆகவே ஆண்டவரின் கண்காணிப்பு வளையத்திற்குள் நாம் மிகவும் எச்சரிக்கையாய் இருந்து நம் வாழ்வையும், ஆத்துமாவையும் காத்துக்கொள்வோம்.

இந்தப் புதிய மாதத்தில் ஆண்டவரின் கண்காணிப்பு வளையத்தில் நம்மை உட்படுத்திக் கொண்டு நம்பிக்கையுடனும், பாதுகாப்புடனும், மகிழ்ச்சியுடனும், ஆசீர்வாதத்துடனும், எச்சரிப்புடனும் வாழ்ந்திருப்போம்.

ஆண்டவரின் கிருபை நம்முடன் என்றும் தங்கியிருப்பதாக.

ஆண்டவரின் திருப்பணியில்
உங்கள் ஆயர்
அருள்திரு.ஆ.விக்டர் பிரேம்குமார்.

# உதவி போதகர் மடல்

ஒவ்வொரு வருடத் துவக்கத்தில் தேவன் நமக்குத் தரும் வாக்குத்தத்தம் என்ன, ஆசீர்வாதம் என்ன என்பதை ஆவலோடு எதிர்பார்க்கிறோம். அதுபோல ஒவ்வொரு வருடத் துவக்கத்திலும் நம் தேவனோடு நமக்குள்ள உறவைப் புதுப்பித்துக்கொள்வதும் மிக அவசியமான ஒன்றாகும். அதற்காகவே நம் திருச்சபைகளில் உடன்படிக்கை ஆராதனையை வருடத்தின் முதல் நாளில் ஆசரிக்கிறோம். ஆண்டவருக்கும், நமக்குமிடையேயான உடன்படிக்கையை மறுபடியும் புதுப்பிக்கின்ற அனுபவத்தை இந்த ஆராதனையிலே பெறுகின்றோம்.

## உடன்படிக்கையைப் புதுப்பித்தல் (யோவான் 6:66-69)
## Renewal of the Covenant (John 6:66-69)

யோவான் 6-ம் அதிகாரம் 66-69 வரை உள்ள வசனங்களில் பேதுரு தனக்கும் இயேசுகிறிஸ்துவுக்கும் இடையேயான உறவைப் புதுப்பிக்கின்ற அனுபவத்தைக் காண்கிறோம். உடன்படிக்கையைப் புதுப்பிக்கும் அனுபவத்தை இந்த பகுதியிலிருந்து நாம் அறிந்து கொள்கின்றோம்.

### 1. உடன்படிக்கை புதுப்பித்தலின் அவசியம் - பின்மாற்றம்
அதுமுதல் ... அனேகர்... பின்வாங்கிப்போனார்கள் (யோவான் 6:66)

இயேசுகிறிஸ்து தன்னை ஜீவ அப்பமாக உருவகித்துக் கூறுகிறார். என் மாம்சத்தைப் புசித்து இரத்தத்தைப் பானம் பண்ணவேண்டும் (யோவான் 6:51,53,54,56) என்று கூறுகின்றார். அவர் தமது வசனங்களையே இப்படிக் கூறுகின்றார் (யோவான் 6:63) என்று விளங்கிக்கொள்ள இயலாத அனேகர் அவரைவிட்டுப் பின்வாங்கிப் போகின்றார்கள். அதுவரைக்கும் சீஷர்களைப்போல இயேசுவைப் பின்பற்றியவர்கள் அதுமுதல் இது கடினமான உபதேசம் என்று பின்வாங்குகின்றார்கள். இங்குதான் உண்மையான சீஷர்களுக்கு உடன்படிக்கையை உறுதிசெய்ய வேண்டிய சூழல் உருவாகின்றது. எப்போது நம் வாழ்க்கையிலே பின்மாற்றம், சோர்பு, விசுவாசத் தளர்ச்சி வருகின்றதோ அப்போது நமது அர்ப்பணம் உறுதி செய்யப்படவேண்டும்.

அன்பானவர்களே! நம்மிடம் பின்மாற்றம் உண்டோ? ஆண்டவரைப் பின்பற்ற வேண்டிய நாம் உலகத்தை நாடி உன்னத அழைப்பை அல்லல் தட்டிக்கொண்டிருக்கிறோமா? இதுதான் சரியான வேளை. இன்றே நம் தேவனோடுள்ள உடன்படிக்கையைப் புதுப்பிக்க நம்மை அர்ப்பணிப்போம்.

2. உடன்படிக்கை புதுப்பித்தலுக்கான அழைப்பு - கிறிஸ்து.

இயேசு .... நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார் (யோவான் 6:67). எல்லோரும் இயேசுவைவிட்டுப் போனாலும் அவருக்கு இழப்பு ஒன்றுமில்லை. சீஷர்களுக்குத்தான் இழப்பு. ஆனாலும் இயேசுவே இறங்கிவருகின்றார். எஞ்சியுள்ள சீஷர்களைப் பார்த்து நீங்களும் போய்விடுகிறீர்களோ? என்று அவரே கேட்கிறார்.

அன்பானவர்களே! நாம் பின்வாங்கும் சூழலிலும் முறுமுறுக்கும் வேளையிலும் கிறிஸ்துவே நமக்காக முதல் அடியை எடுத்து வைக்கிறார். இன்றும் நம்மைப் பார்த்து, நீங்களும் போகிறீர்களோ என்று கேட்கிறார். நமக்காகக் காத்திருக்கும் ஆண்டவரின் சத்தத்துக்கு நம்மை அர்ப்பணித்து இந்த ஆண்டிலே நாம் அவரோடு நடப்போம்.

3. உடன்படிக்கை புதுப்பித்தலின் அடிப்படை - வசனங்கள்.

யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே (யோவான் 6:68). இயேசுவின் கேள்வியினால் உள்ளம் உடைந்த பேதுரு தனது ஆழமான அர்ப்பணத்தை இங்கே புதுப்பிக்கிறார். "யாரிடத்தில் செல்வோம்" என்று கூறுவதன் மூலம்தான் கிறிஸ்துவோடு இருப்பேன் என்கின்ற உறுதியைக் கூறுகின்றார். "நித்திய ஜீவவசனங்கள் உம்மிடத்திலுண்டே" என்று கூறி தான் கிறிஸ்துவோடு நிலைத்திருப்பதற்கான அடிப்படைக் காரணத்தையும் கூறுகின்றார்.

அன்பானவர்களே! யாரிடத்தில் போவோம்? நீர் அற்புதங்களையும், அதிசயங்களையும் செய்கிறீரே என்றோ, நீர் ஆச்சரியமாய் உணவளிக்கிறீர் என்றோ, நீர் எல்லோரையும் குணமாக்குகிறீரே என்றோ பேதுரு சொல்லவில்லை. இன்று அனேகர் கிறிஸ்து அருளும் உலக ஆசீர்வாதம், சுகம், அற்புதம் இவற்றுக்காகவே அவரிடம் வருகின்றனர். நாம் கிறிஸ்துவின் வசனங்களுக்காகவே அவரிடம் வருவோம். அவரது வசனங்களே நமது அர்ப்பணத்திற்கு, உடன்படிக்கைக்கு ஆதாரமாக, அடிப்படையாக அமையட்டும்.

இந்த ஆண்டின் துவக்கத்திலே ஆண்டவருடனான நமது அர்ப்பணத்தையும், உடன்படிக்கையையும் புதுப்பிப்போம். பின்மாற்றம் அடையக்கூடிய சூழ்நிலைகளைக்கண்டு, ஆண்டவரின் அழைப்பை உணர்ந்து, அவரின் வசனங்களுக்காக அவரோடு நிலைத்திருப்போம்.

கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு.ஜான் வெஸ்லி
உதவி ஆயர் - ஃபுஜைரா.

# உதவி போதகர் மடல்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்கு மகிமை உண்டாவதாக. இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் பிப்ரவரி மாதத்தின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புதிய வருடத்தின் முதல் மாதத்தினை இயேசுவின் துணையுடன் நிறைவு செய்து புது மாதத்திற்குள் பிரவேசிக்கக் கிருபை புரிந்த கர்த்தரை ஸ்தோத்தரிப்போம். கர்த்தருடைய வசனத்தை ஜெபத்துடன் தியானிப்போம்.

கர்த்தர் உங்கள் முன்னே போவார், இஸ்ரவேலின் தேவன் உங்கள் பிறகே உங்களைக் காக்கிறவராயிருப்பார். ஏசாயா 52:12

For the LORD will go before you, and the God of Israel will be your rear guard.

கடவுள் இஸ்ரவேல் மக்களை தம் சொந்த மக்களினமாகத் தெரிவு செய்து அவர்கள் இறையுறவில் வாழ திருச்சட்டத்தைக் கொடுத்தார். கி.மு. 8-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் வாழ்ந்த இஸ்ராயேல் சமுதாயம் திருச்சட்டத்திற்கு முக்கியத்துவம் கொடாமல், மரபுகளுக்கும், சடங்குகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தனர். திருச்சட்டம் கூறும் அறம் சார்ந்த வாழ்வு அவர்களிடம் இல்லை. அநீதிகளும், மனித நேயம் இல்லா செயல்கள் மலிந்தன. இதன் விளைவாக அவர்கள் பாபிலோனிய அடிமைத்தனத்தைப் பெற்றனர். இவ்வாறு அடிமைத்தனத்திலிருந்த மக்களுக்கு ஆண்டவர் அருளும் விடுதலை அதன் வழி பெறும் மேன்மையான வாழ்வைக் குறிப்பிடுகிறார்.

கர்த்தர் எவ்விதங்களில் நம்மைப் பாதுகாக்கிறார் என்பதனைத் தொடர்ந்து தியானிப்போம்.

1. கர்த்தர் முன் சென்று பாதுகாக்கிறார்:

ஏசாயா 52:12a - கர்த்தர் உங்கள் முன்னே போவார் The LORD will go before you.

கர்த்தர் எப்போதும் நம்முடன் இருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களின் வனாந்தரப் பயணத்தில் கடவுள் அவர்களுடனிருப்பது மட்டுமல்ல, அவர்கள் பயணத்திற்கு முன் சென்றார். ஆண்டவர் நம்முடைய பயணத்தில் முன்செல்வதை நாம் காணவேண்டும், மகிழ்ச்சியுடன் அனுபவிக்கவேண்டும்.

யாத்திராகமம் 23:20-ல் “வழியில் உன்னைக் காக்கிறதற்கும், நான் ஆயத்தம்பண்ணின ஸ்தானத்துக்கு உன்னைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறதற்கும், இதோ, நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன்.”

கர்த்தருடைய தூதனானவர் உனக்கு முன்சென்று, எமோரியரும் ஏத்தியரும் பெரிசியரும் கானானியரும் ஏவியரும் எபூசியரும் இருக்கிற இடத்துக்கு உன்னை நடத்திக்கொண்டுபோவார், அவர்களை நான் அதம்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (யாத்.23:23).

கர்த்தருடைய மக்களான ஒவ்வொருவரும் அவருடைய வார்த்தையின்படியே வாழ்ந்து, அவரை மட்டுமே சேவிக்கவேண்டும். அப்போது அவர் முன்நின்று நம் வாழ்வில் நிறைவேற்றுகின்ற அதிசயமான செயல்களை நாம் ஒவ்வொரு நாளும் அனுபவிக்கமுடியும்.

ஆகவே நம் வாழ்வுப் பயணத்தில் முன் செல்லும் கர்த்தரை உறுதியாக நம்பி, மகிழ்வுடன் முன்னேறுவோம். கர்த்தர் நம்மைப் பாதுகாப்பார்.

2. கர்த்தர் முன்சென்று பாதைகளை காண்பிக்கிறார்:
மத்தேயு 4:19 "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்றார். "Follow me, Jesus said, and I will make you fishers of men."
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து முன்சென்று பாதைகளைக் காண்பிக்கிறவராகக் காணப்படுகிறார். ஒருவருக்கு மிகவும் தகுந்த பாதை எது என்பதினை இயேசுகிறிஸ்து தெளிவாக அறிந்தவராக இருக்கிறார். இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடந்துபோகும்போது சீமோன் பேதுருவும், அந்திரேயாவும் கடலில் வலை போட்டுக் கொண்டிருக்கும்போது அவர்களைக் காண்கின்றார். அவர்கள் வாழ்வுக்கான மிகச் சரியான பாதையைக் காண்பிக்கின்றார். பாதையைக் காண்பிப்பவராக மட்டுமல்ல, இயேசு முன்னால் சென்று அவர்களைத் தன் பின்னால் வர அழைக்கிறார்.

மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்கள் தங்கள் வலைகளை விட்டுவிட்டு, தாங்கள் நினைத்துப் பார்க்காத பாதையைக் காண்பித்த இயேசுவைப் பின்சென்றனர். அவர்களை இயேசு பிறருக்கு ஆசீர்வாதமாக, மிகச்சிறந்த நிலையில் பயன்படுத்தினார்.

3. கர்த்தர் பின்னால் நின்று காக்கிறார்:
ஏசாயா 52:12b "தேவன் உங்கள் பிறகே உங்களைக் காக்கிறவராயிருக்கிறார்". "The God of Israel will be your rear guard."
எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் இஸ்ரவேல் புத்திரரைப் பின்தொடர்ந்தார். இஸ்ரவேல் புத்திரர் பயந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள். சமுத்திரம் அவர்களுக்கு முன் தடையாக இருந்தது. அப்பொழுது இஸ்ரவேலரின் சேனைக்கு முன்னாக நடந்த தேவதூதனானவர் விலகி, அவர்களுக்குப் பின்னாக நடந்தார், அவர்களுக்கு முன் இருந்த மேகஸ்தம்பமும் விலகி, அவர்கள் பின்னே நின்றது (யாத்.14:19,20). இரண்டு சேனையும் ஒன்றோடொன்று சேராதபடி நடுவில் வந்தது. ஜலம் பிரிந்து மதிலாக இருந்தது. கடவுள் பின்னால் இருந்து ஆபத்து நேரிடாதபடி பாதுகாத்தார்.

அன்பிற்குரியவர்களே, இயேசுகிறிஸ்து ஒவ்வொரு நாளும் நம்மைப் பாதுகாப்பாராக. ஆமென்.

கிறிஸ்துவின் திருப்பணியில்
Rev.M.Rajesh Kumar.
உதவி போதகர் - RAK.

# உதவி ஆயரம்மா மடல்

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன்.

புதிய வருடத்தின் முதல் மாதத்தில் கர்த்தர் நமக்கு அருளிய சுக பெலனுக்காக, இதர நன்மைகளுக்காக கர்த்தரை நன்றியுடன் ஸ்தோத்தரிப்போம்.

புதிய மாதமாகிய பிப்ரவரி மாதத்தில் கர்த்தரின் கரங்களை உறுதியாய் பிடித்துக்கொண்டு ஜெபத்துடன் வாழ்வோம். கர்த்தர் அதிசயமான காரியங்களை நம்முடைய வாழ்விலும், உலகளவிலும் நிறைவேற்றுவாராக.

நல்வாழ்வை அருள அழைக்கும் கர்த்தர் - தியான வசனம் : ஏசாயா 55:3a

"உங்கள் செவியைச் சாய்த்து என்னிடத்தில் வாருங்கள்"

கிறிஸ்தவ வாழ்க்கை அழைப்பின் அனுபவம் நிறைந்தது. ஆண்டவரின் பிள்ளைகளாகிய நாம் சில நோக்கங்களுக்காக அழைக்கப்பட்டிருக்கிறோம். தந்தையாம் கடவுள் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் நித்திய வாழ்வை எல்லாரும் சுதந்தரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அழைக்கிறார். உலக இடர்களால் தாக்கமடைந்து மனிதன் வழிவிலகிப்போகும்போது "உங்கள் செவியைச் சாய்த்து என்னிடத்தில் வாருங்கள்" என கர்த்தர் அவருடைய அரவணைப்பில் வைத்து நமக்கு நல்வாழ்வை அருளுவதற்காக என்னிடத்தில் வாருங்கள் என அழைக்கிறார்.

1. கர்த்தரிடம் இலவசமாய் பெற்றுக்கொள்ள அழைப்பு (ஏசாயா 55:1):
கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் அழைக்கின்றார். தாகமாய் இருப்பவர்களே நீங்கள் அனைவரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள் என அழைக்கிறார். நம்முடைய ஆண்டவர் கருணை மிகுந்தவர். நம்முடைய ஆத்தும தாகத்தை அவர் அறிந்திருக்கிறார், தாகத்தை எப்படித் தீர்க்கவேண்டும் என்றும் அறிந்து வைத்திருக்கிறார்.

தீயமுறைகளைப் பின்பற்றுதல் நம்மை நல்ல நிலைக்குக் கொண்டு செல்வதில்லை. இறை அழைப்பினால் உறவும், கடவுளின் தொடர்பும் வாழ்வில் மாறுதல்களும் உண்டாகின்றன. "நீங்கள் அப்பமல்லாததற்காகப் பணத்தையும், திருப்தி செய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்" (ஏசாயா 55:2) என்று ஏசாயா தீர்க்கர் குறிப்பிடுகிறார்.

"நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவர்களுக்கு ஒருக்காலும் தாகமுண்டாகாது" (யோவான் 4:14) என சமாரியா ஸ்திரீயிடம் கூறுகிறார். இயேசுகிறிஸ்து இலவசமாய் வழங்கும் ஆத்தும உணவை அருந்துவதற்காக இயேசுவின் அழைப்பை ஏற்று பரிசுத்தமாய் வாழ்ந்து தாகம் தீர்க்கும் ஜீவநதியாகிய இயேசுவை வாழ்வின் உறைவிடமாய் கொண்டு வாழ்வோம்.

### 2. கர்த்தரிடத்தில் திரும்புவதற்கான அழைப்பு (ஏசாயா 55:7):

அழைப்பு எல்லாருக்கும் கொடுக்கப்பட்டாலும் பல காரணங்களால் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கின்றனர். இயேசுவிடம் வாலிபன் ஒருவன் வந்து நித்திய ஜீவனை அடைவதற்கு நான் என்ன செய்யவேண்டும் எனக் கேட்டவனிடம் "உனக்கு உண்டானவைகளை விற்று தரித்திரருக்குக் கொடு, பின்பு என்னைப் பின்பற்றி வா" (மத்தேயு 19:21) என அழைப்பு விடுவிக்கின்றார். அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாய் இருந்தபடியால் அவன் துக்கத்தோடு திரும்பிப்போனான். உலகப்பற்றின் காரணமாக நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பினை தவறவிடுகின்றான். உலகப் பற்றினைவிட்டு இயேசுவிடம் திரும்ப அழைப்பு விடுக்கப்படுகிறது.

அனுதின அலுவல்களில் அழுத்தம் காரணமாக அழைப்பை சிலர் புறக்கணித்ததைக் குறித்து (மத்தேயு 22:1-8) வசனங்களை வாசிக்கும்போது அறிந்துகொள்ள முடிகிறது. "அழைக்கப்பட்டவர்களை கல்யாணத்திற்கு வரச்சொல்லும்படி ஊழியக்காரரை அனுப்பினான். அவர்களோ வர மனதில்லாதிருந்தார்கள்" (மத்தேயு 22:3). சில வேளைகளில் இறை அழைப்பை ஏற்றுக்கொள்ள மனதில்லாதிருக்கிறோம். நம் மனதை கர்த்தரிடம் திருப்ப அழைக்கப்படுகிறோம்.

### 3. கர்த்தரைப் பின்பற்ற அழைப்பு(ஏசாயா 55:12):

இயேசுவின் அழைப்பு எல்லோருக்கும் இலவசமாகக் கிடைப்பதால் அதனைக் கவனமாகவும், குறிக்கோளுடனும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அழைப்பு முழுமையடைய அர்ப்பணம் தேவை. இயேசு கூறும்போது ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால் "தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" (மத்தேயு 16:24). கர்த்தரைப் பின்பற்றும்போது சிலவற்றை நாம் கிறிஸ்துவுக்காக இழக்க நேரிடும். நம்முடைய சுயத்தை வெறுத்து கர்த்தரைப் பின்பற்றும்போது மகிழ்ச்சியான சமாதானமான வாழ்வைப் பெறமுடியும் (ஏசாயா 55:12).

இறை அழைப்பை ஏற்றுக்கொண்டால் நம் வாழ்வில் நிலையான ஆசீர்வாதங்களைக் கொண்டு வரும். இயேசுவுக்குச் சீடராகும் வாய்ப்பினைப் பெறுகிறோம். "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என்பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்" (யோவான் 15:8). இறை அழைப்பை ஏற்று வாழும்போது மிகுந்த கனியுள்ள வாழ்வு வாழமுடியும். இருள்நிலை மாறி ஒளிநிலையை அடைகிறோம். "என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஒளியிலே நடக்கிறான்" (யோவான் 8:12). இறை அழைப்பினை ஏற்று வாழும்போது பாவ இருள் அகன்று ஒளியுள்ள வாழ்வு வாழமுடியும். நாம் இறை அழைப்பை ஏற்று கர்த்தரிடம் திரும்பி கர்த்தரைப் பின்பற்றி நிலையான ஆசீர்வாதங்களைப் பெற்று வாழ கர்த்தர் நமக்குத் துணைபுரிவாராக.

கிறிஸ்துவின் பணியில்
திருமதி. J.விஜிலா ராணி
உதவி ஆயரம்மா - RAK.

# செயலர் மடல்

கடலைப் பிளந்து, தமது ஜனத்தைக் கடந்துபோக ஜலத்தைக் குவியலாக நிற்கச் செய்தவரும், பகலிலே மேகத்தினாலும், இராமுழுவதும் அக்கினி வெளிச்சத்தினாலும் வழிநடத்தியவராகிய தேவாதி தேவனுக்கே துதிகனம் மகிமையையும் செலுத்துகிறேன்.

சீறியெழும் கொந்தளிப்பான கடல் அலைகளை தமது வார்த்தையால் அடக்கி ஆள்பவராகிய, சர்வ வல்ல தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. கர்த்தர் நமக்காக யாவையும் செய்து முடிப்பார் என்று கர்த்தரையே நம்பியிருக்கிற தம் அடியவர்களைக் கைவிடாதபடி காத்து நடத்தும் நம் கர்த்தர் மகா பெரியவர்.

கடந்த மாதம் முழுவதும் நம்மைச் சுகமாய் பாதுகாத்து ஆராதனை முறைகள், Prayer Cell, Camp Ministry, Junior Church, Fasting Prayer, Men/Women Fellowship யாவும் Online மூலமாக ஆசீர்வாதமாகவும், சிறப்பாகவும் நடைபெற கிருபை செய்த கர்த்தாதி கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன்.

Corono Virus மூலமாக மீண்டும் அதிக பாதிப்புகள் ஏற்பட்டு விடாதபடிக்கும், பொருளாதார நெருக்கடிகள், வேலைப் பிரச்சனைகள், சரீர பெலவீனங்கள், பலவிதங்களில் ஏற்பட்டுள்ள இழப்புகள், சீர்குலைவுகள் யாவும் மாறிப்போக, கடந்து செல்ல கர்த்தரை உறுதியாகப் பற்றிப்பிடித்து பாரத்தோடு ஜெபிப்போம். ஆலய வழிபாடுகள் முன்புபோல மீண்டும் தொடரவும், ஆலய Registration, Bank Transaction காரியங்களில் காணப்படும் எல்லாவித இடையூறுகளும் கர்த்தர் கிருபையால் அகன்றுபோகவும் ஊக்கத்தோடும் கருத்தோடும் ஜெபிப்போம்.

திருச்சபையாக நாம் தாங்கும் 100 Missionary-களுக்காகவும், அவர்தம் ஊழியங்களுக்காகவும், Kolahur Missionary மருத்துவமனை, மருத்துவர் குடும்பம், சிகிச்சைபெற கடந்துவரும் மக்களுடைய இரட்சிப்புக்காக, சரீர சுகத்துக்காக தொடர்ந்து ஜெபிப்போம். புதிய மாதத்திற்கான புதிய நன்மைகளினால் கர்த்தர் நம்மை நிறைத்து நடத்துவாராக.

Babu Jeyaseelan, Secretary.

# பயத்தை ஜெயித்தவன்

கர்த்தருக்குப் பயந்தவனும்
ஒருத்தருக்கும் பயந்துவிடான்
கர்த்தருக்கே அறிக்கையிடுவான்
உறுத்தலுக்கோ ஒதுங்கிவிடுவான்!

உரத்திருக்கும் விசுவாசத்தான்
உறுதிமனம் நிறைந்திருப்பான்
குறிவைக்கும் பூனையின்முன்
தெறித்தோடும் எலியாகிவிடான்!

தேவபயம் நோவு தருமா?
பக்திபரவசம் திக்குமுக்காடும்!
காவு கேக்கும் கோரமாகுமா?
கருணைகண்டு உருகுபயம்!

கோலியாத்முன் தாவீதாகும்
கொக்கரிக்கும்பகை ஊதித்தள்ளும்
கூழாங்கல்லும் ஆயுதமாகும்
வீழாவெற்றி வீரனாக்கும்!

பழையபாவம் பிழியும் இதயம்
கழையவேண்டும் இளகியமனம்
நுழையவிடா விழிப்பு வேண்டும்
தொடரவிடா திடமனம்வேண்டும்

கர்த்தர்பயம் ஞானஆரம்பம்
பட்டப்படிப்பால் ஞானம்வராதாம்
கர்த்தர்ஒருவரே ஞானப்பொக்கிசம்
ஞானம்பெற்றவர் கருணைப்பாத்திரராம்!

அறிவு ஆற்றல் ஒழுக்கஉச்சம்
ஞானத்திலாம் ஞானவான்இயேசாம்
மரித்துஉயிர்த்த அவர்பக்கம்
நெருங்கிவந்தால் வெற்றிசுற்றுதாம்!

ஆதாரம் : சங்கீதம் 34:4; 46:3; யாத்தி. 23:27; நீதி. 2:5; 8:13
சங்கீதம் 2:11; நீதி. 1:7; கொலோசெ. 2:3

கவிதை எண் : 237 கவி புனைவு : மணிமுத்து.

# நீங்கள் கிறிஸ்தவரா...

"வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்."
மத்தேயு 15:11

மனுஷரின்...
வாய்...
வாய்மை
பேசும்போது
திறக்கவும்
பொய்மை
பேசாது
மூடிக்கொள்ளவும்
ஒருவருக்கு
முடியுமானால்
அவரே...
வாய்மைக்கும்
தூய்மைக்கும்
மேன்மைக்கும்
சொந்தமானவர்
கர்த்தருக்கும்
பிரியமானவர்.
ஒரு ஜாடிக்கு
ஒரு மூடி
வேண்டும்தானே!
வாய்க்கு...
உள்ளே போகும்
உணவு... அது
அறுசுவை
உடையதோ
உப்பு கலந்த
கூழோ... அது
எதுவானாலும் கூட
மனிதரை
வளர்க்கும்
ஒருபோதும்
மாசுபடுத்தாது.
'வாயைக் கொடுத்து
வாங்கிக்
கட்டிக்கொள்ளாதே
என்பதும்
பேசாதிருப்பது
பெரியோருக்கும்
அழகு என்பதும்
தமிழ் தந்த
அமுதமொழி'
வாயிலிருந்து
வரும்
வார்த்தை
பாவம்
பழி
இல்லாது
பொல்லாங்கு
சொல்லாது...
பிறர்... மனதை
புண்படுத்தாது
மனுஷனைத்
தீட்டுப்படுத்தாது.
நம் வாழ்வில்
முன்னும்
பின்னும்
யாசித்துக்
கேட்போரை
நேசித்து,
யோசித்து,
அன்புக்கு
இனியதை
பேசுவோம்.
இல்லையெனில்
வாயை
மூடிக்கொள்வோம்
மௌனம் கொள்வோம்
ஓ... மனிதா
கர்த்தரை...
பக்தியோடு
மனம் நொந்து
ஜெபித்து...
அழைக்காது
போனால்...
இயேசுவுக்கு
என்ன நஷ்டம்
பலர்...
இயேசுவை...
நினைப்பதுகூட
இல்லைதானே!
இதனால்
கர்த்தருக்கு
நஷ்டமா...
கஷ்டமா...
ஓ... மனிதா
அது - நமது
துரதிஷ்டமே!!!
அலை
அடங்கினால்
கடலின் அமைதி
தெரியலாம்...
ஓ.. மனிதா...
மனதின்
ஆசை...
அடக்கினால்
இயேசுவைப்
பார்க்கலாம்.
இதுவே...
பக்தியின்
சக்திநிலை.
நீதிமொழிகள் 21:23
தன் வாயையும்
தன் நாவையும்
காக்கிறவன்
தன் ஆத்துமாவை
இடுக்கண்களுக்கு
விலக்கிக்
காக்கிறான்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# அறிந்து கொள்வோம்!

## கும்ரான் குகைகள் / Qumran Caves

கும்ரான் குகைகளில் கண்டுபிடிக்கப்பட்ட Dead sea scrolls அதாவது தோல்சுருள்களைக் குறித்து நாம் ஏன் தெரிந்திருக்க வேண்டும் என்பதைக் குறித்து நாம் அறிந்துகொள்வோம். இந்தச் சுருள்களில் எஸ்தரின் சரித்திரத்தைத் தவிர எல்லா புஸ்தகங்களும் அடங்கியுள்ளது என்பது தான் ஆச்சரியமான ஒன்று. எனவே எபிரெய எழுத்துக்களில் இதை மசோரெடிக் உரை (Masoretic text) என அழைப்பார்கள். நம்முடைய பழைய ஏற்பாடு இந்த கும்ரான் குகைகளில் கண்டெடுக்கப்பட்ட சுருள்களின் பிரதிபலிப்பு என்றால் மிகையாகாது.




“கானான்” (canon) என்பது புனித நூல்களின் பட்டியல் அல்லது தொகுப்பு. இதை பழைய ஏற்பாட்டு கானான் மற்றும் புதிய ஏற்பாட்டு கானான் என இரு வகைகளாக பிரித்துக் கூறுவர். நாம் இன்று பயன்படுத்தும் வேதாகமம் இந்த கானானை அடிப்படையாகக் கொண்டது. கத்தோலிக்கத் திருச்சபைகள் பழைய ஏற்பாட்டு கானானோடே அதிக நூல்களை இணைத்துள்ளனர்.




“அப்போக்ரிப்பா” (Apocrypha) என்பது உறுதியற்ற அல்லது சந்தேகத்துக்குரிய புத்தகங்களின் தொகுப்பு. இது நமது வேதாகமத்தில் சேர்க்கப்படாத புத்தகங்கள் அல்லது பகுதிகளாகும். இவை எபிரெய வேதாகமத்திலோ, கிரேக்கத்தில் உள்ள செப்துவஜிந்து (Septuagint) யூத வேதப்பகுதிகளிலோ இடம் பெறவில்லை என வேத அறிஞர்கள் கூறுகின்றனர்.

“சூடிபிகிராபா” (Pseudepigrapha) என்பது பழைய ஏற்பாட்டில், அப்போக்ரிப்பாவில் மற்றும் ஜோசிபஸ் என்னும் இறையியல் வேத அறிஞரின் புத்தகங்களிலோ இடம்பெறாத மிகவும் பழமையான யூத வேலைப்பாடுகளின் தொகுப்பாகும். இது இந்த சவக்கிடங்கு சுருள்களின் கண்டுபிடிப்பிற்கு முன்பதாக தோன்றியவையாகும்.

அப்போக்ரிப்பா மற்றும் சூடிபிகிராபாவிற்கும் உள்ள ஒற்றுமை என்னவென்றால் இவை இரண்டும் நம்முடைய வேதாகமத்தில் சேர்க்கப்படவில்லை. கத்தோலிக்க வேதாகமங்கள் இவற்றில் சிலவற்றை சேர்த்துக் கொண்டுள்ளது. இவற்றை கானானிற்கு புறம்பானவை எனக்கூறி சில யூதர்களும், ஆதிக்கிறிஸ்தவர்களாலும் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. ஆனால் இச்சமயத்தில் வேதாகமம் மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டது.

1. நியாய புத்தகம்
   The Law - Genesis to Deuteronomy
2. தீர்க்கதரிசிகள்
   பெரிய மற்றும் சிறிய தீர்க்கர்களின் மற்றும் வரலாற்று புத்தகங்கள்
   The major and minor prophets and some of the historical books
3. மற்ற எழுத்துக்கள்
   முக்கியமாக தாவீதின் கவிதைகளின் தொகுப்பு
   Poetry attributed to David



பழைய ஏற்பாட்டுக் குறிப்புகள் முழு விவிலிய சுருள்களின் வடிவத்தில் வருகின்றன. நிறைய குறிப்புகள் இந்த கும்ரான் குகைகளின் சுருள்களின் கண்டுபிடிப்பிற்கு முன்னதாக நமக்குத் தெரிந்தவைகள் என்றாலும், பல குறிப்புகள் இந்த கும்ரான் குகைளின் சுருள்களின் மூலம் நமக்கு முதன்முறையாக தெரிய வந்தவைகள் தான்.

ஷெம்மா (Shema) எனக் கூறப்படுவது உபாகமம் 6:4-9 வரையுள்ள பகுதியாகும். இதை நிறைவேற்றவே தலைகளிலும், தங்கள் கைகளிலும் (tephilim), மற்றும் தங்களுடைய நிலக்கால்களிலும் (mezuza) இந்த காகிதத்தோல்கள் (parchment) அடங்கிய ஒரு பெட்டியைச் சுமந்து செல்வதை யூதர்கள் பாரம்பரியமாகவும் வழக்கமாகவும் கருதுகின்றனர்.

தொடரும்....

தொகுப்பு: ஷீபா ரெஜினால்ட்

## வருந்துகிறோம்

**"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"**

நமது சபை அங்கத்தினர்
Mr. John Solomon அவர்களின் தாயார்
Mrs. Deva Sundarabai Yesuvadian அவர்கள் கடந்த 01-01-2021 அன்றும்
நமது சபை அங்கத்தினர்
Mrs. Ruba Joy அவர்களின் தகப்பனார்
Mr. I.C.Jayakumar அவர்கள் கடந்த 13-01-2021 அன்றும்
நமது சபை அங்கத்தினர்
Mr. Raja Mohandhas அவர்களின் சகோதரர்
Mr.Vibin Suresh அவர்கள் கடந்த 15-01-2021 அன்றும்
நமது சபை அங்கத்தினர்
Mr. Ezekiel Samuel அவர்களின் தகப்பனார்
Mr. Augustine Samuel அவர்கள் கடந்த 16-01-2021 அன்றும்
கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# திருச்சபை ஜெபநாள் 07-02-2021 (முதல் ஞாயிறு)

"கர்த்தருடைய வீட்டிலும், நமது தேவனுடைய ஆலயப்பிரகாரங்களிலும் நிற்கிறவர்களே, கர்த்தரைத் துதியுங்கள்." சங்கீதம் 135:2

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- நமது திருச்சபையின் ஆராதனைகளும், Junior Church மற்றும் எல்லாவிதமான ஊழியங்களும், Team Meeting online மூலமும் சிறப்பாக நடைபெற கர்த்தர் நமக்குப் பாராட்டின கிருபைகளுக்காக நன்றி கூறுவோம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- உலகின், இந்தியாவின், தமிழ்நாட்டின் அரசியல் நிலை சீரடைய ஜெபிப்போம்.
- உயர்கல்விக்காக ஆயத்தப்படும் பிள்ளைகள் ஏற்ற கல்வி பெற்று வாழ்வு உயர்த்தப்படவும் ஜெபிப்போம்.
- கொரோனா பாதிப்புகளிலிருந்து கர்த்தர்தாமே யாவரையும் பூரணமாய் விடுவித்து பாதுகாத்து நடத்திட தொடர்ந்து ஜெபிப்போம்.

"தேவாதி தேவனைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது."
சங்கீதம் 136:2

**நமக்கென ஓர் ஆலயம் கட்டுவதற்கான இடவசதியும், பொருளாதார தேவைகளும் சந்திக்கப்பட சபையார் தங்கள் தனி ஜெபங்களிலும், குடும்ப ஜெபங்களிலும் ஊக்கமாக தொடர்ந்து ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.**

# சகரியா - எலிசபெத்

புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள முதல் குடும்பம் சகரியா - எலிசபெத்து குடும்பம். அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின் படியேயும் நியமங்களின் படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள். இவர்கள் இருவரையும் பற்றிக் கூறப்பட்டுள்ள இந்த காரியங்கள் மூலம், இவர்கள் ஒரு நல்ல தரமுள்ள வாழ்க்கை வாழ்ந்த தம்பதிகளாயிருந்தார்கள் என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

### 1.கர்த்தருடைய சகல கற்பனையின்படியும் வாழ்ந்த குடும்பம்:

இவர்கள் தேவனுடைய வசனத்திற்குக் கீழ்படிந்து பரிசுத்தமாய் வாழ்ந்து வந்தனர். ஒரு சில கட்டளைகளைக் கைக்கொண்டவர்கள் என்று சொல்லாமல் தேவனுடைய எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்படிந்து ஓர் நலல பக்தியுள்ள வாழ்க்கை வாழ்ந்தார்கள். தேவனுடைய எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்படிந்து நடக்கும் குடும்பம் மெய்யாகவே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

### 2. எல்லா நியமங்களையும் கைக்கொண்டு வந்த தம்பதியர்:

நியமங்கள் என்பது ஒழுங்குகள், சட்டத்திட்டங்கள். அதாவது சட்டத்திட்டங்களுக்கு கீழ்படிந்து நடந்தனர். சிலர் வசனத்திற்குக் கீழ்படிந்து பரிசுத்தமாய் வாழ்வார்கள். ஆனால் சில ஒழுங்குகளுக்குக் கீழ்படிய மாட்டார்கள். அலுவலகத்திலுள்ள வேலை சம்பந்தமான காரியங்கள், அயலகத்தாருடன் பழகும் விஷயத்தில் சிலர் அறநெறித் தன்மையுடன் நடந்து கொள்வதில்லை. சகரியாவும் எலிசபெத்தும், தேவனோடும் மனிதரோடும் நல்ல உறவு வைத்திருந்தார்கள். தேவனுக்கு முன்பாக பாவம் செய்யவில்லை என்பது மட்டுமல்ல, மற்றவர்களுக்கு விரோதமான குற்றங்களையும் செய்யாமல் எந்த விஷயத்திலும் குற்றமற்றவர்களாய் நடப்பது அவசியம்.

### 3. பிள்ளையற்ற பெற்றோராயிருந்தனர்:

இவ்வளவு பரிசுத்தமாய் வாழ்ந்த இவர்களுக்கு குழந்தை பாக்கியம் இல்லாதிருந்தது. இப்படிப்பட்ட நிலையில் இருக்கும் பெண்ணை மலடி என்று குறை கூறுவார்கள். தூதன் மரியாளிடம், மலடி எனப்பட்ட எலிசபெத்துக்கு இது ஆறாம் மாதம் எனக் கூறியதன் மூலம் எலிசபெத்தையும் இவ்வாறே குறை கூறினார் என்பதைக் காணலாம். சில குடும்பங்களில் கணவர்மாரும், குழந்தையில்லாத தன் மனைவியை குறை கூறி பேசுவார்கள். இந்த நிலையிலுள்ள அநேகர் கர்த்தரைக் குறை கூறுவார்கள். ஆவிக்குரிய வாழ்விலும் சோர்ந்து போவார்கள். கர்த்தர் உண்மையுள்ளவர், ஒருபோதும் மறக்கவே மாட்டார். அவருடைய வேளையில் தமது சித்தத்தை வெளிப்படுத்துவார்.

### 4. தள்ளாத வயதிலும் தளராது ஊழியப் பாதையில் முன்னேறிய குடும்பம்:

ஆவிக்குரிய வாழ்வில் ஒரு மனதுடன் இணைந்து வளர்வது எவ்வளவு ஆசீர்வாதமானது. நாம் தேவனை இத்தனை உத்தமமாய் சேவித்தும் அவர் தமது சுதந்தரத்தைத் தரவில்லை என்று கூறி விரக்தியுடன் இருக்காமல், ஆசாரிய வகுப்பைச் சேர்ந்த அவன் தேவ சந்நிதியில் தேவப் பணியை விருப்பத்துடனேச் செய்து வந்தான். எலிசபெத்தும் தனது முதிர் வயதிலும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு தன்னிடம் வந்த மரியாளிடம், கர்த்தரை ஆனந்த களிப்புடன் போற்றித் துதித்துப் பாடினாள். சகரியாவும் பிள்ளை பிறந்ததும் அவனது நாவு கட்டவிழ்க்கப்பட்டு தேவனை ஸ்தோத்தரித்துப் பேசினதுமல்லாமல், பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு தீர்க்கதரிசனம் உரைத்தான். தள்ளாத வயதிலும் மனதில் ஊனமடையாமல் ஊழியம் செய்தார்கள். தேவஊழியம் செய்ய வயது தடையில்லை. உண்மையும் உத்தமுமாய் வாழ்ந்தும், ஊழியம் செய்தும் வாழ்வில் ஏங்குகிற ஒரு ஆசீர்வாதம் கிடைக்கவில்லை என்பதால் சோர்ந்து போகாமல் கர்த்தரைத் துதித்து ஊழியம் செய்வது தொடரட்டும்.

### 5. சகரியாவின் அவிசுவாசம்:

ஆலயத்தில் ஊழியம் செய்து வந்த நேரத்தில் காபிரியேல் என்ற தூதன் சகரியாவிற்குத் தரிசனமாகி, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது, உனக்கு குழந்தையைக் கர்த்தர் தருவார், அவனுக்கு யோவான் என பெயரிட வேண்டும், அவனது ஊழியம் எப்படியிருக்கும் என்ற விளக்கமும் கூறியும், எத்தனையோ ஆண்டுகள் தொடர்ந்து ஜெபித்து வந்த சகரியா தேவதூதன் நேரில் சொல்லியும் நம்ப இயலாதவனாய் இருந்தான். நானும் என் மனைவியும் வயதானவர்களாய் இருக்கிறோமே, இதை நான் எதினால் அறிவேன் என்று அடையாளம் கேட்டான். பிள்ளை பெறும் வரை நீ ஊமையாய் இருப்பாய் என்ற அடையாளம் தண்டனையாகக் கொடுக்கப்பட்டது. ஜெபித்தால் போதாது விசுவாசத்துடன் ஜெபிக்க வேண்டும் என்பதற்கு சகரியா ஒரு உதாரணம். சில சமயங்களில் தேவனுடைய ஆசீர்வாதம் நம்மை வந்தடைவதில் காலதாமதம் ஏற்படலாம். தேவவார்த்தை சொல்லுவது இயற்கைக்குப் புறம்பானதாக இருந்தாலும் சந்தேகப்படாமல் விசுவாசத்துடன் தொடர்ந்து அறிக்கையிட்டு ஜெபிக்க வேண்டும்.

ஜெபத்தைக் கேட்கிற தேவன், நம் கண்ணீரைக் காணும் தேவன், தகுந்த வேளையில் நம்மை ஆசீர்வதிப்பார். சகரியா, எலிசபெத்து குடும்பத்தின் நிந்தையை நீக்கி இயேசு கிறிஸ்துவை உலகத்திற்கு அறிமுகப்படுத்திய, எரிந்து பிரகாசிக்கும் விளக்காக விளங்கின, ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் பெரிய தீர்க்கதரிசியாகிய யோவான்ஸ்நானனை அவர்களுக்கு மகனாகக் கொடுத்த கர்த்தர், ஏற்ற காலத்தில் ஆசீர்வாதத்தைத் தர, அவரின் ஆசீர்வாதக் கரத்தினுள் அடங்கியிருக்க நமக்கு உதவி செய்வாராக.

இனிதா மோசஸ்

**மிஷனெரிகள் பகுதி 89**

**அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம் - மத்தேயு 9:37**

**Rev. மிரோன் வின்சுலோ**

